# யோனத்தான்
# விந்தையான பற்றுறுதிகள்

*சிசிலியில் இருந்த முதியவரான ஸ்கிப்பியோ என்பவர் எந்த நம்பிக்கையில் தமது கடற்படையை கார்த்தேஜுக்கு எதிராகக் கடந்து செலுத்த யூகித்தார் என்று யாரோ ஒருவர் கேட்டார். கேட்டவரிடம் இவர், ஆயுதம் தாங்கிய ஒழுங்கமைவு கொண்ட முன்னூறு மனிதர்களைக் காண்பித்து, கடற்கரையில் இருந்த உயர்ந்த கோபுரம் ஒன்றைச் சுட்டிக் காட்டி, ''அந்தக் கோபுரத்தின் மீதேறி தலைகீழாக விழு என்று நான் கட்டளையிட்டால், அதை நிறைவேற்றாதவர்கள் இந்தக் குழுவில் இல்லை'' என்று கூறினார். ஸ்கிப்பியோ விரோதிகளின் முகாமிற்குள் சென்று, இறங்கி, அதைத் தீக்கிரையாக்கினார். கார்த்தேஜியர்கள் தங்கள் கப்பல்களை ஒப்புக் கொடுக்கவும், யானைகளையும் பெரும் பணத்தையும் அளிக்கவும் முன் வந்தார்கள். அவருடைய படையணியின் தனிச்சிறந்த, கேள்வியெழுப்பாத பற்றுறுதியே அவருக்கு இந்த வெற்றியைப் பெற்றுத் தந்தது.*

இந்த வரலாற்றில், யோனத்தானின் வாழ்வில் *பற்றுறுதி* என்பது மிகவும் இன்றியமையாத காரணியாக உள்ளது. இந்த மனிதர் 1 சாமுவேல் புத்தகத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க பாத்திரங்களில் ஒருவராக இருக்கின்றார். இவர் சவுலின் மூத்த மகனாக ஒரு இளவரசராக இருந்தார். யோனத்தானில் ஒருவர் – பயமற்ற படைவீரர், தனது படையணியிடமிருந்து வெட்கக் கேடற்ற கடமையைப் பெற்ற படைத்தளபதி, மனித அன்பின் மிக உயர்ந்த பண்புகளைக் காட்சிப்படுத்தக் கூடிய ஒரு நண்பர், தேவன் மேல் மாபெரும் விசுவாசம் கொண்டிருந்த ஒரு விசுவாசி என்பவை போன்ற – மாண்புமிக்க பண்புகளைக் காண்கின்றார். யோனத்தான் உண்மை பேசும் மனிதராக, தூய்மையான வாழ்வை வாழ்ந்தவராக, மற்றும் தான் கவனித்த எல்லாத் தவறுகளையும் திருத்த முயற்சி செய்தவராக இருந்தார். இவரது மிக உன்னதமான பண்பானது இவரின் தந்தையினுடைய குணத்திற்கு நேரெதிரானதாக உள்ளது.

## இவருடைய பற்றுறுதி

பற்றுறுதியைக் கட்டி வைத்த தேவனுடைய கட்டளைகளை (யாத். 22:28; எண். 27:20; உபா. 7:9; நீதி. 24:21; முதலியவைகளை) யோனத்தான் நன்கு அறிந்திருந்தார். இந்த விஷயத்தில் இவர் தேவனுடைய சித்தத்தைப் பின்பற்றுவதில் எச்சரிக்கையாய் இருந்தார். இவரது பற்றுறுதி உச்சரிக்கப் பட்ட மூன்று பகுதிகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

*தேவனுக்குப் பற்றுறுதி (14:45)*

*யோனத்தானைப் பற்றிய முதல் வசனக் குறிப்பில், இவர் தேவனைப் பற்றி நன்கு அறிந்தவராகவும், சர்வ வல்லவர் மீது நம்பிக்கையுள்ள விசுவாசம் கொண்டிருப்பவராகவும் பேசுவதைக் காண்கின்றோம். ஒன்று சாமுவேல் 14:6ம் வசனம், "யோனத்தான் தன் ஆயுததாரியாகிய வாலிபனை நோக்கி: விருத்தசேதனம் இல்லாதவர்களுடைய அந்தத் தாணையத்திற்குப் போவோம் வா; ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார்; அநேகம் பேரைக் கொண்டாகிலும், கொஞ்சம் பேரைக் கொண்டாகிலும், இரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லை என்றான்" என்று கூறுகின்றது. தேவன் மீது யோனத்தான் கொண்டிருந்த நம்பிக்கை அசைக்க முடியாததாக இருந்தது (14:12ஆ).*

*தேவன் மீதான இந்தப் பற்றுறுதியானது 1 சாமுவேல் புத்தகத்தில் பல வசனப் பகுதிகளில் செயல்விளக்கப்படுத்தப் படுகின்றது. காத் என்ற இடத்திலிருந்து வந்த இராட்சதனைத் தாவீது கொன்றதை யோனத் தானும் சவுலும் காண்கையில், யோனத்தான் தேவனுடைய கரத்தை அங்கு கண்டார் (19:5). சவுலின் பொறாமையினால் யோனத்தானும் தாவீதும் பிரியப் போன வேளையில், இவர் தேவன் தங்களோடிருப்பதை அறிந்தவராய் தமது கவலையில் ஆறுதலைக் கண்டறிந்தார் (20:42). அந்த இரு நண்பர்களும் கடைசி முறையாகச் சந்தித்துக் கொண்ட பொழுது, யோனத்தான் தேவன்மீது கொண்டிருந்த நம்பிக்கையே அங்கு பிரதான மாயிருந்தது (23:16). யோனத்தானின் விசுவாசம் தாவீதுக்குப் பெலன் அளித்தது.*

*இந்த உண்மைகள் யாவும் ஒன்றிணைந்து, யோனத்தானை கட்டுறுதி வாய்ந்த விசுவாசியாக முன்னிறுத்துகின்றது. தேவன் மீது கொண்டிருந்த விசுவாசத்தின் காரணமாக இவரால் பூமிக்குரிய போராட்டம், துக்கம் மற்றும் சோர்வு ஆகியவற்றிற்கு மேலாக எழும்பி நிற்க முடிந்தது! தேவனு டைய நோக்கம் மற்றும் திட்டம் ஆகியவற்றில் ஒரு கருவியாயிருக்க வேண்டும் என்பதே யோனத்தானின் முழு நம்பிக்கையாயிருந்தது. யோனத்தான் தம்மில் சிறிதளவே விசுவாசமும், ஆனால் தேவனிடத்தில் வியத்தகு விசுவாசமும் கொண்டவராயிருந்தார். யோனத்தான் தேவனு டைய பெலத்திற்காக வேண்டிக் கொண்டபடியினால் வெற்றியடைந்தார் (இ.வ. மாற். 11:24).*

*தேவனிடத்தில் யோனத்தான் கொண்டிருந்த பற்றுறுதியைக் குறித்து பின்வருவதைக் காட்டிலும் சிறந்த விளக்கம் வேறெதுவும் இருப்பதில்லை: "தேவன் துணை நிற்க அவன் (இன்று) காரியத்தை நடப்பித்தான்" (14:45ஆ).*

*ஒரு நண்பன் என்ற வகையில் பற்றுறுதி (18:1)*

*யோனத்தானும் தாவீதும், உறுதியான மற்றும் ஒப்புக்கொடுத்தல் கொண்ட நட்புறவைப் பகிர்ந்து கொண்டார்கள் (18:3, 4). நட்புறவின் இந்த உடன்படிக்கை ஒருவருக்கொருவர் மற்றவருக்கு உடைகளைக் கொடுத்துக் கொள்வதின் மூலம் முத்திரையிடப்பட்டது. இவ்விதமாக இது ஒருவருக் கொருவர் கொண்டுள்ள ஒருமைப்பாடாகச் சித்தரிக்கப்பட்டது.*

*யாரேனும் ஒருவர் யோனத்தானுடன் சண்டையிடுவாரேயானால் அவர் உண்மையில் தாவீதுடன் சண்டையிடுபவராகவே இருந்தார்; யாரேனும் ஒருவர் தாவீதுடன் சண்டையிடுவாரேயானால் அவர் உண்மையில் யோனத்தானுடன் சண்டையிடுபவராகவே இருந்தார். இந்த உடன் படிக்கையானது இரு நண்பர்களுக்கிடையில் சாத்தியமாகக் கூடிய மிக உயர்ந்த பிணைப்பாயிருந்தது.*

*யோனத்தான், தாம் ஒருக்காலும் அரசராக அமரப் போவதில்லை என்பதை அறிந்திருந்தார் (23:17), ஆனால் அவரிடத்தில் பொறாமையின் இலேசான சாயல் கூட இல்லை. தாவீதின் மீதான அவரது பற்றுறுதியானது, அவரது நண்பனுக்கு மிகச் சிறந்தவற்றையே நாடும்படி செய்தது. இவ்விதமாக யோனத்தான், உண்மையான நட்புறவு என்பது தியாகம் நிறைந்த ஒழுக்க நெறியே ஆகும் என்று நமக்கு காண்பிக்கின்றார்.*

*யோனத்தானின் நட்புறவானது உண்மையான நட்புறவின் பின்வரும் கூறுகளை உள்ளடக்கியிருந்தது: "பிரியம்" (19:2); "ஒப்புக் கொடுத்தல்"; நேர்மை (20:9); உறுதிப்பட்ட பாசம் (20:42; 2 சாமு. 1:26); உற்சாகப் படுத்துதல்கள் மற்றும் பெலப்படுத்துதல் (23:16).*

*நீங்கள் சங்கீதம் 133ஐ வாசிக்கையில் யோனத்தான் மற்றும் தாவீது ஆகியோரால் பகிர்ந்து கொள்ளப்பட்ட அழகுமிக்க நட்புறவு உங்கள் நினைவிற்கு வரும். நட்புறவின் இந்தப் பிணைப்பானது பின்வரும் வரலாற்று நிகழ்ச்சியினால் விவரிக்கப்படுகின்றது. கிரேக்க வரலாற்றில் எபாமினோன்டஸ் மற்றும் பெலோப்பிடாஸ் ஆகியோருக்கிடையில் இருந்த நட்புறவு விரித்துரைக்கப்படுகின்றது. மண்ட்டினியா என்ற இடத்தில் நடந்த போரில் இவர்கள் இருவரும் தங்களின் கேடயங்களைப் பிணைத்துக் கொண்டு போரிட்டார்கள், அப்பொழுது பெலோப்பிடாஸ் பல காயங்களினால் இரத்தம் சிந்தி கீழே விழும் வரைக்கும் அவ்விருவரும் எல்லா எதிரிகளையும் துரத்திக் கொண்டிருந்தார்கள். எபாமினோன்டஸ், இறந்து போனதாகத் தான் கருதிய தனது நண்பனின் உடலை விட்டுச் செல்வதற்கு மாறாக, தான் இறந்து போவதென்று தீர்மானித்தான். இவனும் மிக மோசமாகக் காயம்பட்டு, இருவரையும் மீட்டுச் செல்வதற்கு மீட்புக் குழுவினர் வரும் வரையிலும் தொடர்ந்து போரிட்டு உயிரோடிருந் தான், இவ்விருவருமே காக்கப்பட்டார்கள். அந்த நாள் முதல் இவர்களின் நட்புறவு பழமொழிக் கூற்றானது. இவர்கள் தெபீயன் படையில் சமமான அந்தஸ்தும் அதிகாரமும் கொண்ட பதவிகளில் படைத்தளபதிகளாக ஏற்படுத்தப்பட்டார்கள், இவ்விருவரும் உயிருடன் வாழ்ந்திருந்த காலத்தில் இவர்களுக்கிடையில் எந்தப் போட்டியும், அல்லது பொறாமையும் ஒருக்காலும் இருந்ததில்லை. (இ.வ. நீதி. 17:17அ; 18:24ஆ).*

***மகன் என்ற வகையில் பற்றுறுதி (2 சாமுவேல் 1:23)***

*பற்றுறுதியின் இந்த வட்டாரம்தான் யோனத்தானை கற்பனை செய்ய இயலாத போராட்டங்களுக்கு வழிநடத்திச் சென்றது. இஸ்ரவேலின் அடுத்த அரசராக தேவன் தாவீதை அபிஷேகம் செய்திருந்தார் என்று இவர் (யோனத்தான்) அறிந்திருந்தார். இவ்விதமாக, இவர் தேவன் மீது*

*கொண்டிருந்த பற்றுறுதி இவரைத் தாவீதிற்கு ஆதரவு தெரிவிக்கும்படி அழைத்தது (23:17). தாவீதுடனான இவரது நட்புறவு இவரை சவுலின் பொல்லாத திட்டங்களுக்கு ஒத்துழைப்பதற்குப் பதிலாக நம்பிக்கைக்கு உரியவராக நிலைத்திருக்கும்படி அழைத்தது (20:9, 12; 23:17). ஆனால் இவர் தம் தந்தையிடம் கொண்டிருந்த பற்றுறுதி இவரை சவுலுக்கு ஆதரவு அளிக்கும்படி வற்புறுத்தியது! இவரது இளம் இருதயமானது இந்த போராட்டங்களை நிறுத்துப் பார்த்து முடிவெடுக்க வேண்டியதாயிருந்தது. இவர் "முட்டைக் கூடுகளின் மீது நடந்து செல்ல" வேண்டியதாயிற்று. அல்லது இவர் வியக்கத்தக்க "விந்தை வேலை" செய்ய வேண்டியதாயிற்று என்று நீங்கள் கூறலாம்.*

*யோனத்தான் சவுலுடன் இருந்தார். இவர் தமது தந்தைக்கு ஒப்புக் கொடுத்தலுடன் இருந்தார், ஆயினும் தேவனுக்கும் தாவீதுக்குமான தமது பற்றுறுதியை இன்னமும் பராமரித்து வந்தார் (23:16, 17). சவுலின் தொடக்க ஆண்டுகளில் யோனத்தான் தமது தந்தைக்குப் பற்றுறுதியுடன் இருத்தல் என்பது இவருக்கு மிகவும் கடினமாயிருந்ததில்லை. சவுல் தேவனுடன் ஒன்றிணைந்திருந்தார் என்று யோனத்தான் அறிந்தார். ஆனால் சவுலின் கலகம் வந்தது, தேவன் அந்த முடியரசரிடமிருந்து விலகிச் சென்றார், அசுத்த ஆவிகள் அவரை ஆண்டு கொண்டிருந்தன. சவுலின் மாபெரும் மனவெடிப்புக்களின் போது யோனத்தான் தமது தந்தையுடன் இருந்தார். அவர் பொல்லாங்கை விட்டுவிடக் கூடும் என்று இவர் நினைத்திருக்கலாம். இவரது தெரிவு கடுமையான சோதனைகளைக் கொண்டு வந்தது, ஆனால் யோனத்தான் தாம் தேர்ந்து கொண்ட ஓட்டத்தில் இருந்து ஒருக்காலும் பின்மாற்றம் அடையாதிருந்தார் (20:30-33).*

*சவுல் கில்போவா மலையை நோக்கி அணிவகுத்துச் சென்ற பொழுது, யோனத்தான் அவருடன் இருந்தார். அந்த மலையின் மீது தந்தையும் மகனும் ஒன்றாக இறந்து போனார்கள்.*

*பிள்ளைகள் பெற்றோரிடம் பற்றுறுதியாய் இருக்க வேண்டும் என்பது தேவனால் தெளிவாகக் கட்டளையிடப்பட்டுள்ளது (லேவி. 20:9; யாத். 20:12; முதலியன). யோனத்தானைப் பின்பற்றி, தங்கள் பெற்றோருக்குப் பற்றுறுதியாய் நடந்து கொள்கின்ற பிள்ளைகள் யாவரும் ஆசீர்வதிக்கப் படுவார்கள். தேவனுக்கும் பெற்றோருக்கும் நாம் காண்பிக்க வேண்டிய பற்றுறுதிகளில் போராட்டங்கள் எழும் பொழுது, அல்லது அவையிரண்டும் முரண்படும் பொழுது, வேதனைகள் எவ்வளவு வந்தாலும் ஒருவர், பெற்றோருக்கு மேலாக தேவனைத் தேர்ந்து கொள்ள வேண்டும்! (மத். 10:34-39).*

## பற்றுறுதியின் பாடங்கள்

*தேவனுக்கான பற்றுறுதி மிகவும் முக்கியமானதாக உள்ளது. தேவனுக் கான பற்றுறுதி நமது இருதயங்களில் பதிக்கப்பட்டு என்ன விலை கொடுத்தும் நமது வாழ்வு முறைகளில் பராமரிக்கப்பட வேண்டும்! ஜான் ஆட்லி என்பவரிடம் பிஷப் போன்னெர் அவர்கள், தூணில் கட்டி வைத்து*

எரிக்கப்படுதலுடன் தொடர்புடைய வேதனைகள் பற்றிக் கூறிய பொழுது, அவரது கருத்தை மாற்றும் எண்ணத்துடன் ஆட்லி அவர்கள், "எனக்கு மட்டும் என் தலையில் உள்ள முடிகளின் எண்ணிக்கையைப் போல் உயிர்கள் இருக்குமென்றால், நான் கிறிஸ்துவை இழக்கும் முன்பாக, அவற்றையெல்லாம் அக்கினியில் இழக்கத் தயாராயிருப்பேன்" என்று பதில் கூறினார். (இ.வ. சங். 18:1; 91:14; யாத். 22:28.) தேவனுக்கான பற்றுறுதியானது, (அமெரிக்க) உள்நாட்டு யுத்தத்தின் போது இருந்த பறையடிக்கும் இளம் பையன் ஒருவனால் நன்கு விவரிக்கப்படுகின்றது. குளிர்கால முகாமில் அவர்கள் சகித்துக்கொண்ட குளிர், இரக்கமின்றி கடிக்கும் காற்று, பசி மற்றும் பல சிரமங்கள் எல்லாவற்றையும் குறித்து அவன் தனது வீட்டாருக்குக் கடிதம் எழுதினான். கடிதத்தின் இறுதியில் அவன் பின்வருமாறு எழுதி முடித்தான்: "ஆனால் அம்மா, இது எங்கள் கடமையாக உள்ளது, எங்கள் கடமைக்காக நாங்கள் இறக்க (வும்) தயாராயிருக் கின்றோம்." இப்படிப்பட்ட பற்றுறுதியானது தேவனுடனான நமது உறவுமுறைகளில் மெய்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

குடும்பம் அல்லது நண்பர்களுக்கான பற்றுறுதியானது தவறை ஒருக்காலும் மன்னித்து விட்டு விடுவதில்லை. அதை எப்பொழுதும் எதிர்த்து நிற்கின்றது! யோனத்தான் சவுல் மீது அன்புகூர்ந்தார் மற்றும் அவர் மீது இவர் கேள்வி கேட்க இயலாத பற்றுறுதி கொண்டிருந்தார், ஆனால் அந்த அன்பு இவரை அமைதியாயிருக்கும்படி செய்ய அனுமதிக்கக் கூடாதிருந் தார். இவர் நியாயம், நீதி மற்றும் சத்தியம் ஆகியவற்றைப் பேச வேண்டி யிருந்தது (19:1-6; 20:30-33). நமது வாழ்வில், நமது குடும்பத்தவர்களோ அல்லது நண்பர்களோ தவறு செய்து, திருத்துதல்கள் தேவைப்படுகையில் நாம் அமைதியாய் இருத்தல் என்பது மிகவும் சுலபமானதாகும். நாம், ''எதையாவது சொல்லுமளவுக்கு நான் மிகவும் நெருங்கியவனா யிருக்கிறேனே'' என்று கூறுகின்றோம். இப்படிப்பட்ட எண்ணப் போக்கானது *சரியானதல்ல!* (நீதி. 27:6, 9, 17; கலா. 4:16).

ஒப்புக்கொடுத்தல் உள்ள ஒரு நண்பரின் மரணத்தின் போது அவர் கொண்டிருந்த பற்றுறுதி ஆழமான மற்றும் மிகப் பிரியமான வகையில் நினைவுகூரப்படும். 2 சாமுவேல் 1:19-27 வசனங்களில் யோனத்தான் பற்றிய நினைவுகள் கிளர்ந்தெழுப்பப்படுகின்றன.

> "இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று; பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்கள். பெலிஸ்தரின் குமாரத்திகள் சந்தோஷப்படாதபடிக்கும், விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத்திகள் களிகூராதபடிக்கும், அதைக் காத் பட்டணத்தில் அறிவியாமலும் அஸ்கலோனின் வீதிகளில் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருங்கள். கில்போவா மலைகளே, உங்கள்மேல் பனியும் மழையும் பெய்யாமலும், காணிக்கைக்கு ஏற்ற பலன் தரும் வயல்கள் இராமலும் போவதாக; அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப் பட்டது; சவுல் தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படாதவர்போல அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே. கொலையுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாமலும், பராக்கிரமசாலிகளின் நிணத்தை

*உண்ணாமலும், யோனத்தானுடைய வில் பின்வாங்கினதில்லை; சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை. உயிரோடே இருக்கையில் சவுலும் யோனத்தானும் பிரியமும் இன்பமுமாயிருந் தார்கள்; மரணத்திலும் பிரிந்து போனதில்லை; கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப்பார்க்கிலும் பலமுமுள்ளவர் களாயிருந்தார்கள். இஸ்ரவேலின் குமாரத்திகளே, உங்களுக்கு இரத்தாம்பரத்தைச் சிறப்பாய் உடுப்பித்து, உங்கள் உடையின்மேல் பொன் ஆபரணங்களைத் தரிப்பித்த சவுலுக்காக அழுது புலம்புங்கள். போர்முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்களே, யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே. என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப் படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது. பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்களே; யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே."*

*யோனத்தானின் நட்புறவினுடைய நினைவுகள் தாவீதுக்கு எப்பொழுதும் இன்பம் மிக்கவையாக இருந்தன (2 சாமு. 1:26, 27அ).*

*பற்றுறுதியானது வரவிருக்கும் தலைமுறைகளில் கனி தருகின்றது. 20:42ன் வார்த்தைகள் 2 சாமுவேல் 9:1-13 மற்றும் 2 சாமுவேல் 21:1-7 ஆகியவற்றில் நிறைவேற்றப்பட்டன. யோனத்தானின் பற்றுறுதியானது ஆசீர்வாதங்களின் மரபுரிமையை விட்டுச் சென்றது. சவுலின் கலகத் திலிருந்து விளைந்த குடும்பப் பேரழிவும் தெளிவற்ற நிலையும் யோனத் தானின் பற்றுறுதியினால் குறிப்பிடத் தக்க நிலைக்கு உயர்த்தப்பட்டன.*

## *முடிவுரை*

*யோனத்தான் கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளின் சேனையொன்றை நபர்த்துவப் படுத்துகின்றார். ஆனால் இவரது ஒழுக்க நெறிகளில் பற்றுறுதியே முன்னணியில் உள்ளது. இவர் கில்போவாவின் கசப்பான யுத்த களத்தில் மடிந்தார், ஆனால் இவர் பெலிஸ்தரிடத்தில் அடைந்த தோல்வி யினால் அழிக்க இயலாத மாபெரும் வெற்றியொன்றை இவர் வென்றிருந்தார். பொல்லாத விருப்பங்களின் மீது, கோபம் மற்றும் பொறாமையினால் இச்சையானது அழிக்கக் கூடாததாயிருந்த வெற்றியை யோனத்தான் பெற்றிருந்தார். இவரது மிக மேன்மையான வெற்றியானது, பற்றுறுதி என்ற ஒரே வார்த்தையினால் தொகுத்துரைக்கப்படுகின்றது!*

*தேவனுக்கான உங்கள் பற்றுறுதியானது கட்டுப்பாட்டில் உள்ளதா? உங்கள் நண்பர்களுக்கான உங்கள் பற்றுறுதியானது ஊழியத்தில் ஈடுபட்டுள்ளதா? உங்கள் குடும்பத்திற்கான உங்கள் பற்றுறுதியானது அக்கறை கொள்வதாயுள்ளதா?*